DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,

KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 111 of 2021 |
| Deposition of witness for | : | PW1 |
| Name | : | கிருஷ்ணன் |
| Father's Name | : | வெங்கடேசலு நாயுடு |
| Village | : | போத்திநாயனப்பள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | வியாபாரம் |
| Age | : | 92 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 12th day of December 2024.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :-

நான் தற்போது போத்திநாயனப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். தேங்காய் வியாபாரம் செய்து வருகிறேன். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு காலை சுமார் 12.00 மணியளவில் எனக்கு சொந்தமான ஸ்கூட்டியில் வேப்பனப்பள்ளிக்கு சென்று விட்டு திரும்ப வந்து கொண்டிருந்தேன். நான்கு பேர் என்னை காட்டு பகுதியில் வழிமறித்து நிறுத்தினார்கள். ஏன் வழிமறித்து நிறுத்தினீர்கள் என்று கேட்டதற்கு ஒரு நபர் என் தலையில் கத்தியால் வெட்டினார். அவர் ஆஜர் எதிரி அருண்குமார்(A3) என்று சாட்சி கை நீட்டி அடையாளம் காட்டினார். அதன் பிறகு நான் கீழே விழுந்து விட்டேன். இரண்டாவது பட்டியல் சாட்சி அங்கிருந்தார். அவரும் அங்கிருந்தவர்களும் என்னை எழுப்பி, தண்ணீர் கொடுத்து கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். அப்போது

என்னுடைய பணம் காணாமல் போய் விட்டது. இது சம்பந்தமாக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும், எதிரி தரப்பில் அவகாசம் கேட்டதால் குறுக்கு விசாரணை இல்லை என முடித்து வைக்கப்பட்டது.

மறு விசாரணை :-

இல்லை.

ஒம் /- திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,

KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 111 of 2021 |
| Deposition of witness for | : | PW2 |
| Name | : | மகாதேவன் |
| Father's Name | : | திம்மராயப்பன் |
| Village | : | சிந்தகம்பள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | விவசாயம் |
| Age | : | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 12th day of December 2024.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :-</u>

நான் தற்போது சிந்தகம்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 கிருஷ்ணன் எனக்கு தெரியும். கடந்த 08.11.2019 ஆம் தேதி மதியம் 12.00 மணிக்கு மேல் இருக்கும். கூலி ஆட்கள் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். நான் அவர்களை பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது அ.சா.1 தலையில் அடிபட்டு இரத்தம் வழிந்து கொண்டு வந்திருந்தார். என்ன நடந்தது என்று கேட்டேன். அதற்கு அவர் வியாபாரத்திற்கு போய் விட்டு திரும்ப வரும் போது வண்டியை தள்ளி விட்டு, பணத்தை பிடிங்கி சென்று விட்டதாக கூறினார். அவருக்கு தண்ணீர் தந்து, என்னுடைய வாகனத்தை கொடுத்து அவருடைய மகன்களை அழைத்து வரச் சொல்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும், எதிரி தரப்பில் அவகாசம் கேட்டதால் குறுக்கு விசாரணை இல்லை என முடித்து வைக்கப்பட்டது.

மறு விசாரணை :-

இல்லை.

ஒம் /- திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 111 of 2021 |
| Deposition of witness for | : | PW3 |
| Name | : | ராஜ்குமார் |
| Father's Name | : | கிருஷ்ணன் |
| Village | : | போத்திநாயனப்பள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | விவசாயம் |
| Age | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 12th day of December 2024.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :-

நான் தற்போது போத்திநாயனப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 கிருஷ்ணன் எனது அப்பா ஆவார். அ.சா.2 மகாதேவனையும் எனக்கு தெரியும். கடந்த 08.11.2019 ஆம் தேதி நான் எனது ஊரில் இருந்த போது மதியம் சுமார் 12.00 மணியளவில் மகாதேவன் எனக்கு போன் செய்து, உனது அப்பாவை அடித்து விட்டார்கள், இரத்த காயம் ஏற்பட்டுள்ளது, அவர் தோட்டத்தில் உள்ளார் என்று தகவல் சொன்னார். நான் சென்று பார்த்தேன். தலையில் இரத்த காயம் ஏற்பட்டு உடல் முழுவதும் இரத்தம் சிந்திய நிலையில் இருந்தார். என்ன நடந்தது என்று கேட்டேன். அவர் காலை 09.00 மணியளவில் அவருடைய இரு சக்கர வாகனத்தில் வேப்பனப்பள்ளிக்கு தேங்காய் வியாபாரத்திற்கு சென்று விட்டு, திரும்பி வந்த போது, வேப்பனப்பள்ளிக்கு அருகே

கோணேகவுண்டனூர் வழியாக வரும் போது, கல்யாண குட்டை என்ற இடத்தில் நான்கு பேர் அந்த இடத்தில் வந்து மழுவால் தலையில் வெட்டினார்கள் என்றும், அவர் தன்னுடைய underwear பாக்கெட்டில் வைத்திருந்த வியாபாரத்திற்காக எடுத்துச் சென்ற ஆள் இல்லை என்று திருப்பி கொண்டு வந்த ரூ.25,000/- பணத்தை எடுத்துச் சென்று விட்டதாக சொன்னார். அதன் பிறகு அவரை கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றோம். அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தோம். அந்த சம்பவத்திற்கு பிறகு எனது தகப்பனாருக்கு paralysis attack ஏற்பட்டது. அதன் பிறகு அவர் ஊனமாகி விட்டார். என் தகப்பானரின் ஸ்கூட்டி வாகன எண்.TN 24 AC 4317 ஆகும். மேற்படி தொகையை நாங்கள் நீதிமன்றம் மூலமாக திரும்ப பெற்றுக் கொண்டோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும், எதிரி தரப்பில் அவகாசம் கேட்டதால் குறுக்கு விசாரணை இல்லை என முடித்து வைக்கப்பட்டது.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

ஒம் /- திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,

KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 111 of 2021 |
| Deposition of witness for | : | PW4 |
| Name | : | கௌதம் ராஜ் |
| Father's Name | : | விஸ்வநாதன் |
| Village | : | போத்திநாயனப்பள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | Dairy framing |
| Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 12th day of December 2024.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :-</u>

நான் தற்போது போத்திநாயனப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். Dairy farming நடத்தி வருகிறேன். அ.சா.1 கிருஷ்ணன் எனது தாத்தா ஆவார். அ.சா.3 ராஜ்குமார் எனது மாமா ஆவார். கடந்த 08.11.2019 அன்று நான் கிருஷ்ணகிரி டவுனில் இருந்த போது அ.சா.3 எனக்கு போன் செய்தார். அப்போது மணி 12.00 லிருந்து 01.00 மணி இருக்கும். போன் செய்து அ.சா.1 க்கு அடிப்பட்டிருப்பதாகவும், உடனே கிளம்பி வருமாறும் சொன்னார். அ.சா.2 தோட்டத்திற்கு போனோம், தாத்தா அங்கு தான்இருந்தார். என்ன நடந்தது என்று கேட்ட போது கத்தியால் தலையில் தாக்கிவிட்டு பணத்தை எடுத்துச் சென்றதாக சொன்னார். பின்னர் அவரை கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும், எதிரி தரப்பில் அவகாசம் கேட்டதால் குறுக்கு விசாரணை இல்லை என முடித்து வைக்கப்பட்டது.

மறு விசாரணை :-

இல்லை.

ஒம் /- திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,

KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 111 of 2021 |
| Deposition of witness for | : | PW5 |
| Name | : | ராஜ சேகர் |
| Father's Name | : | செல்வராஜி |
| Village | : | போத்திநாயனப்பள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | |
| Age | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 12th day of December 2024.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :-</u>

நான் தற்போது போத்திநாயனப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். பந்தல் அலங்காரம் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 கிருஷ்ணன் எனது தாத்தா ஆவார். கடந்த 08.11.2019 ஆம் தேதி நான் எனது வீட்டில் இருந்த போது பகல் 12.30 மணிக்கு உறவினர் தேவன் என்கிற தக்காளி தேவன் எனக்கு போன் செய்து உன் தாத்தாவை யாரோ அடித்து போட்டிருக்கிறார்கள், தலையில் இரத்த காயம் ஏற்பட்டிருக்கிறது, மருத்துமவனைக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று சொன்னார். பின்னர் சம்பவ இடம் சென்று அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும், எதிரி தரப்பில் அவகாசம் கேட்டதால் குறுக்கு விசாரணை இல்லை என முடித்து வைக்கப்பட்டது.

மறு விசாரணை :-

இல்லை.

ஒம் /- திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.